
# Path to Dharma

## தர்ம நெறி (Dharma Neri)

## 81



**Sri Sankar Publications**

**KshethraVinayaka Temple, Sri Munneswaram,Chilaw, Sri Lanka.**

**ஷேத்திர (வயல்) விநாயக ஆலயம், ஸ்ரீமுன்னேஸ்வலம், சிலாபம் ஸ்ரீலங்கா.**

**Author - B.S.Sarma**


**September 2014 (ஆவணி/புரட்டாசி )**

# Editorial


'Path to Darma' the monthly magazine, published by KshethraVinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka, is presenting the 81st issue this month. The foremost intention of this magazine is to converse the perceptions linked to Hinduism and its ceremonial rituals, customs and dharma, to the anxious readers.The elucidation and investigation from the readers are appreciated.

B.SivaramakrishnaSarma,


KshethraVinayaka Temple, Sri Munneswaram, Chilaw, Sri Lanka. September 2014.











## Can you give a short account of The Shiva Sahasranama?

Sahasranama means thousand (sahasra) names (nama), and Sahasranama Stotra is a hymn praising the Lrd Shiva by recitating one thousand of His names. The Shiva Sahasranama Stotra (-the hymn of a thousand names -)distinctive because of the numerous times and deviations of the hymn, that are seen in very old texts. The Shiva Sahasranama Stotra is given in at least eighteen different texts.

One published version of the Shiva Purana includes six samhitas (texts) namely:

i. Jnana Samhita
ii. Vidyeshvara Samhita
iii. Kailasa Samhita
iv. Sanatkumara Samhita
v. Vayaviya Samhita
vi. Dharma Samhita

This version of the Shiva Purana is divided into 290 chapters and contains roughly 12,000 verses.
Another published version of the Shiva Purana contains seven samhitas namely:

i. Vidyeshvara Samihta
ii. Rudra Samhita
iii. Shatarudra Samhita
iv. Kotirudra Samhita
v. Uma Samhita
vi. Kailasa Samhita
vii. Vayaviya Samhita

This version of the Shiva Purana is divided into 451 chapters and contains roughly 24,000 verses.
The Shiva Purana itself narrates that the text of the Vidyeshvara and the Vayaviya Samhitas, both of which are common to both versions.The original Shiva Purana contained 12 samhitas totaling 100,000 verses. Furthermore, the Vidyeshvara (II:49-56) and Vayaviya Samhitas list the names of 12 samhitas and the original number of verses in each:

i. Vidyeshvara Samhita (10,000)
ii. Rudra Samhita (8,000)
iii. Vainayaka Samhita (8,000)
iv. Uma Samhita (8,000)
v. Matri Samhita (8,000)
vi. Rudra-Ekadasha Samhita (13,000)
vii. Kailasa Samhita (6,000)
viii. Shatarudra Samhita (3,000)
ix. Sahasrakotirudra Samhita (11,000)
x. Kotirudra Samhita (9,000)
xi. Vayaviya Samhita (4,000)
xii. Dharma Samhita (12,000)

Below is a list of the texts in which Shiva Sahasranama Stotras are found.


i. Mahabharata (Anushasanaparva version)
ii. Mahabharata (Shantiparva version)
iii. Linga Purana (version 1; chapter 65)
iv. Linga Purana (version 2; chapter 97)
v. Shiva Purana (Kotirudra Samhita)
vi. Vayu Purana
vii. Brahmanda Purana
viii. Devi Mahabhagavata Upapurana
ix. Padma Purana
x. Skanda Purana
xi. Vamana Purana
xii. Markandeya Purana
xiii. Saura Purana
xiv. Bhairava Tantra
xv. Bhringiridi Samhita
xvi. Rudrayamala Tantra
xvii. Shiva Rahasya Itihasa
xviii. Akasa Kalpa Tantra

There are four different major variants of the Shiva Sahasranama:

i. Mahabharata (Anushasanaparva version)
ii. Mahabharata (Shantiparva version)
iii. Shiva Purana
iv. Rudrayamala Tantra

# இந்து மக்களின் சமயவிழாக்கள்

ஆழ்ந்த தத்துவார்த்தங்களின் அடிப்படையிலும் ஆன்மீக நம்பிக்கையின் முக்கியத்துவத்தின் அத்திவாரத்தின் அடிப்படையிலும் இந்துக்களின் சமய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு விழாவுக்கும் சமூக நலன்பேணும் அம்சங்களும் சுகாதார நலன்பேணும் அம்சங்களும் இருக்கின்றன. இவ்விழாக்களைக் கொண்டாடுவதில் மக்கள் மிக ஆர்வமுடன் வந்து கூடுகிறார்கள். கோவில்களில் நடைபெறும் இவ்விழாக்களில் அபிஷேகம், அலங்காரம், பூஜாகைங்கரியங்கள், கதாப பிரசங்கங்கள், பஜனைகள், தேவார திருவாசக பாராயணம், தமிழ்இசைப் பக்திபாடல்களைப் பாடுதல் முதலிய சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இவ்விழாக்களுள் மிக முக்கியமானது மகா சிவராத்திரியாகும். தனித்தனியாக எல்லா சமய விழாக்களையும் எடுத்துப் பார்க்கக் கூடியதான அரியவிடயங்கள் இருப்பினும் சிவராத்திரி விழா ஒன்றை நாம் விரிவாகப் பார்ப்போம்.





## சிவராத்திரி

இந்துமதத்தில் இராத்திரி என்ற பெயரால் கொண்டாடப்படும் விழாக்கள் இரண்டு உள்ளன. அவை நவராத்திரி, சிவராத்திரி எனப் பெயர் பெற்றுள்ளன. நவராத்திரி சக்தியைக் குறித்து, வழிபடும் விழாவாக அமைவுபெற, சிவராத்திரி சிவனைக் குறித்து வழிபடும் விழாவாக அமைந்துள்ளது.

புறக்கண்களுக்குப் புலனாகாது, அகக்கண்களுக்கு மட்டுமே தென்படுவது அருவத் திருமேனி புறக்கண்களுக்குப் பல்வேறு உறுப்புகளுடனும், அம்சங்களுடனும் புலப்படுவது உருவத் திருமேனி, ஒருவித உறுப்புக்களுமின்றி ஒளிப் பிளம்பாய்த் தோன்றுவது அருவுருவத் திருமேனி.

அருவத் திருமேனி போன்று, புலன்களுக்குப் புலப்படாமல் போகாது, உருவத் திருமேனிகளைப் போன்று பல்வேறு உறுப்புக்களுடனும் தோன்றாது, எல்லாத் திருவுருவங்களுக்கும் அடிப்படையான நிலைக்கனாக விளங்கும், சிறப்பினைப் பெறுவது, அருவுருவத் திருமேனியாகிய இலிங்க மூர்த்தம்.

சிவராத்திரி விழாப் பூஜைகளில், சிவலிங்க மூர்த்தமே முக்கிய இடம் பெறுகின்றது. சிவராத்திரி விழா தோன்றியதையும், அதன் சிறப்பையும் விளக்குவதற்காகப் பல சம்பவங்களைப் புராணங்களும், இதிகாசங்களும் இயம்புகின்றன.

சிவபுராணம், இலிங்க புராணம், ஸ்காந்தம், பத்மம் போன்ற புராணங்களும், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் சிவராத்திரி பூஜையின் சிறப்பியல்புகளையும், மகிமைகளையும், எடுத்துக் கூறுகின்றன.

### பல்வகை சிவராத்திரி

நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐந்து வகையான சிவராத்திரி விழாக்கள் கொண்டாடப்படுகின்றன வென்பதை சமய நூல்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு சதுர்த்தசித் திதி, இரவுகளிலும் சிவபூஜை செய்து, வழிபாடு நடத்துவதன் மூலம், ஒரு வருடத்தில் இருபத்தி நான்கு, சிவராத்திரி பூஜைகளை நடாத்துவது நித்திய சிவராத்திரி எனப் பெயர் பெறும்.


தை மாதத்துக் கிருஷ்ண பட்சத்துப் பிரதமை தொடக்கம், பதின்மூன்று தினங்கள் சிவபூஜைகள் நடாத்தி, சதுர்த்தசியில் சிவ பூஜை செய்வதுடன் முடிவுறுவதை பட்ச சிவராத்திரி என்பர்.



மாசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்து, சதுர்தசி, பங்குனியில் வரும் முதல் திருதியை, சித்திரையில் வரும் கிருஷ்ண பட்சத்து அஷ்டமி, வைகாசியில் வரும் முதல் அஷ்டமி, ஆனி மாதத்து சுக்கில பட்சத்துச் சதுர்த்தி, ஆடி மாதத்து கிருஷண் பட்சத்து பஞ்சமி, ஆவணி மாதத்து சுக்கில பட்சத்து அஷ்டமி, புரட்டாசி மாதத்தில் வரும் முதல் திரியோதசி, ஐப்பசி, மாதத்து சுக்கில பட்சத்து துவாதசி, கார்த்திகை மாதத்து முதல் சப்தமியும்,

அஷ்டமியும் மார்கழி இரு பட்சத்து சதுர்த்தசிகள் , தை சுக்கில பட்சத்து திருதியை, ஆகிய தினங்களில் நடாத்தப்படும் சிவபூஜைகள் மாதசிவராத்திரி எனப் பெயர் பெறும்.

திங்கட் கிழமைகளில் அறுபது நாழிகையும் அமாவாசை இருந்தால் அன்றைய தினம் நடாத்தப்படும் சிவபூஜை, யோக சிவராத்திரி எனப் பெயர் பெறும்.

மாசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்து சதுர்த்தசியில் நடைபெறும் சிவபூஜைகளை மகா சிராத்திரியென அழைப்பர்.



**மகா சிவராத்திரி**

மாசி மாத அபரப'த்தில் (மேய்பிறையில்) (பெப்ரவரி - மார்ச்) மாதத்தில் இவ்விழா கொண்டாடப்படுகின்றது. கந்தப்புராணத்தில் நான்கு சிவராத்திரி விழாக்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. முதலாவதாக நித்திய சிவராத்திரி (ஒவ்வொரு இராத்திரியிலும்) கொள்ளப்படுவது. இரண்டாவது மாத சிவராத்திரி அபரப' சதுர்த்தசியில் (14ம் தேய்பிறையன்று) கொண்டாடப்படுவது. மூன்றாவது சிவராத்திரி மகா சிவராத்திரி என்பது. இவ்விழாவை சிவனுடைய முக்கியமான விழாவாக சைவ மக்கள் கொண்டாடுகின்றனர். மாசிமாதத்தில் அபரபட்ச பிரதமைத் திதியிலிருந்து சதுர்தசித்திதி இரவும் அடுத்தினம் அமாவாசையன்றும் அதி விமரிசையாகக் கொண்டாடப்படுவது. 14ம் தியாகிய சதுர்தசி இரவு முஜவதும் நான்கு சாமங்களிலும் விசேட அபிஷேக ஆராதனைகள் இந்துக் கோவில்களில் நடாத்தப்படும் நான்காவது மகாசிவராத்திரி என அழைக்கப்படுவது, இத்தினத்தில் 24 மணித்தியாலங்களைக் கொண்ட காலத்தில் பகலிலும் இரவிலும் சிவபெருமானை நினைந்து ஆசாரசீலமுடன் விரதாதிகளை முறைப்படி பங்கமில்லாமல் உபவாசமிருந்து துயில் நீக்கி பயபக்தியுடன் சைவப் பெருமக்கள் அனுட்டிப்பது முறை. இந்துக்கள் யாவரும் சிவராத்திரி விழாவை மாசி மாதத்தில் கொண்டாடுவர். சிவராத்திரி விரதம் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படவேண்டிய சிவ விரதமாகும். இது மகா சிவராத்திரி என அழைக்கப்படுகிறது.

சதுர்த்தி பகலிலும் இரவிலும் மக்கள் சிவஸ்தலங்களுக்குச் சென்று அபிஷேக ஆராதனைகளில் கலந்துகொள்ளுதல் ஆன்மீக விழிப்பை சமயிகளிடம் ஏற்படுத்துகின்றது. “ஓம் நமசிவாய” என்ற பஞ்சா'ரமந்திரத்தை உச்சாடனம் செய்து தியானத்தில் ஈடுபடுதல் மிகப் புனிதமாகக் கொள்ளப்படுகின்றது. ஸ்ரீ ருத்திரம், சமகம் சிவமகிமாஸ்தோத்திரம் சிவ தாண்டவஸ்தோத்திரம் போன்றவை பக்தி சிரத்தையுடன் பாடப்படுகின்றன. சிலர் கதாப்பிரசங்ககளைக் கேட்டும் இரவில் கண்விழித்து நான்கு சாமப் பூஜைகளிலும் பக்தி சிரத்தையுடன் பங்கு பற்றுவர். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது உலக அழிவுக்குக் காரணமான ஆலகால விடத்தை விழுங்கி தனது கண்டத்தில் வைத்து மக்களை காத்த தினம் சிவராத்திரி தினமாகும். இதனை நினைவிற் கொள்ளும் பொருட்டு சிவராத்திரி தினம் கொண்டாடப்படுகின்றது.

தீபங்களை ஏற்றி, வீதியை வலமாகச் சுற்றிவருதல், வில்வப்பத்திரத்தால் அர்ச்சனை செய்தல் தேவார திருவாசகம் முதலான திருமுறைகளை பஜனை செய்து ஓதுதல். பக்தர்கள் திரிகரண சுத்தியுடன் சிவராத்திரியில் செய்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுதல் மக்களின் வழிபாட்டுச் சிறப்பு ஆகும்.

வழிபாட்டுச் சிறப்பு ஆகும்.

- கண்ணப்ப நாயனார் தன்கண்ணைக் கொடுத்து சிவபெருமானுக்கு அருகிலே என்றென்றும் இருக்க திருவருள்பெற்றமை.
- அர்ஜுனன் கடும் தவம் செய்து சிவபெருமானிடமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றமை.
- மார்க்கண்டேயருக்காக யமனை சிவபெருமான் காலால் உதைத்து மார்க்கண்டேயருக்கு என்றும் 16 வயது என வரம் கொடுத்தமை.
- பார்வதியம்மை ஆற்றிய சிவலிங்கபூஜையால் தனது உடலில் பாதியை கொடுத்து அர்த்தநாரீஸ்வரர் ஆகியமை.
- பீமனது “சிவபூஜை”யால் அவன் பெருங் கர்வம் அடைந்ததை ஒழித்து அவனுடைய கர்வத்தை பங்கஞ்செய்தமையும் அவனுக்கு ஞானத்தை நல்கியமை

போன்ற சம்பவங்கள் சிவராத்திரி தினத்திலே இடம் பெற்றன எனக் கூறப்படுகின்றது.

சிவராத்திரியில் நான்கு சாமத்திலும் செய்யப்படும் அபிஷேகம் மிகவும் விஷேசமானது. முதலாம் சாமமாகிய மூன்று மணித்தியாலத்துக்கு செய்யும் அபிடேகத்தில் பஞ்சாமிர்தம் முக்கியம் பெறுகின்றது. ஐந்து வித சுவைகளைக் குறிக்கும் பொருள்களின் கலவைதான் பஞ்சாமிர்தம் முக்கனிகள், தேன், நெய் என்பவற்றுடன் கூடியதே பஞ்சாமிர்தம்.சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின் தேன், நெய்யுடன் சேர்ந் பழங்களின் கலவை எனலாம்.

இரண்டாம் சாமத்தில் இடம்பெறும் அபி'கேத்தில் தேன் முக்கியபொருளாகும்.

மூன்றாம் சாமத்தில் இடம்பெறும் அபி'கேத்தில், வாசனைத்திரவியங்களை இட்டு கும்பத்தில் நிரப்பிவைக்கப்பட்டு, ருத்ர மந்திர உச்சாடம் செய்யப்பட்ட கும்ப தீர்த்தம் முக்கிய இடம் பெறுகின்றது.

நான்காவதும் கடைசியுமான இரவின் பிற்பகுதியில் இடம்பெறும் அபி'கேத்தில், பால், தேன், தயிர், நெய் மற்றும் பழக்கலவையாகிய பஞ்சாமிர்தம் விஷேசமாக இடம்பெறுகின்றது. இவை பின்வருவனவற்றின் குறியீடுகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆன்மாவுக்கு உணர்வூட்டும் சக்தியையும் உயிர்ப்பையும் நல்கும் மனம், புத்தி, சித்தம், பேதைத்தனம், மனோசக்தி ஆகியவற்றைக் குறிக்கின்றன. அதுவும் அல்லாமல் அக உணர்ச்சியைத் தூண்டும் அகங்காரம், இருதயத்தின் செயற்பாடு என்பவற்றையும் மனித உடல்களுக்கு விருத்தியாக்கிக் கொடுப்பதாக சொல்லப்படுகின்றது. மற்றும் விபூதி சந்தனாபிஷேகம் முதலியனவும் சிவலிங்க மூர்த்தில் மிகவும் மேலானதோர் தெய்வீக அழுத்தத்தை நல்கி மூவலிங்க அபிஷேகமுடிவில் பக்தர்களின் தரிசனப்பொழுது அவர்களிடம் எழும் பார்வை நரம்புகளின் முடிவில் தங்கி பார்வை அனுபவ அலைகளை தூண்டச் செய்கின்றது. சிவராத்திரியில் சிவலிங்கத்துக்கு செய்யப்படும் அபி'கேம் மற்றும் கிரியைகள் சிவராத்திரி காலத்தின் மிக முக்கியம் வாய்ந்தவை.

சிவன்கோவில்களின் கர்ப்பக் கிருஹத்தின் பின்பக்கமுள்ள மாடத்தில் லிங்கோற்பவ மூர்த்தி அமைந்துள்ளது. சிவலிங்கத்திலிருந்து ஜோதியாக எழும் வடிவமைப்பில் சிவபெருமானை லிங்கத்தில் காட்டப்பட்டுள்ளது இவ்வடிவத்தில், சிவமூர்த்தம் அடியும் (பாதங்கள்) முடியும் (முடி) காண்பிக்கப்படாமல் வடித்திருப்பதன் பொருளாவது பின்வருமாறு, அன்னவாகனத்தில் மேலே பறந்த பிரம்மாவும், பன்றிவடிவமாக பூமியைத் துளைத்து திருமாலும் தவிர்க்கப்பட்ட நிலையில் ஜோதிப் பிழம்பாக லிங்கோற்பவ மூர்த்தம் மும்மூர்த்திகளும் ஒன்றே என்பதைக் காண்பிக்கப்படுகின்றது. படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களில் முக்கியத்துக்கும் மூலகாரணன் சிவனே என்பதை இது காட்டுகிறது. வரங்களை இறைவனிடம் திர்பார்க்கும் நாம் அவற்றைப்பெறத் தகுதியுள்ளவராக இருக்க வேண்டும் என்பதை இறைவன் எதிர்பார்த்திருப்பதாகக் கொள்ளப்படுகின்றது. எமக்கு மிகவும் வேண்டப்படும், விருப்புடன் அனுபவிக்கும் ஒரு செய்கையை நான் இறைவனுக்காக ஒருநாளேனும் தவிர்த்து எம்மை தகுதியுள்ளவர்களாக ஆக்கி, சிவபெருமானின் அருளை சிவராத்திரியில் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனாலேயே எமக்கு இன்றியமையாத இளைப்பாறும் பண்பாகிய நித்திரையை இறைவனுக்காக அர்ப்பணித்து விரதமிருந்து எம்மை வரம்பெறுவதற்கு தகுதியுள்ளவராக ஆக்கிக் கொள்கிறோம். இதன் பொருட்டே சிவராத்திரி காலத்தில் நித்திரையை முதன் நாளும் அன்றும் அடுத்த நாளும் தவிர்த்து விரதபங்கம் இல்லாமல் எம்மை தகுதியுள்ளவராக ஆக்கிக்கொள்ளுகின்றோம்.

**சிவராத்திரியைப் பற்றிய புராணக் கதைகள்**

உலகம் சிவனிடம் ஒடுங்கிய காலத்தில் (பிரளயத்தின் போது) சிவனோடு கலந்து, சிவனை இயக்கும் சக்தியானவள், சிவனைப் பூஜித்து, மீண்டும் உயிர்கள் தோன்ற வழிவகை செய்த தினமே சிவராத்திரியெனப்படும் என்பது ஒரு புராணக் கதை.

**சிவராத்திரியின் தோற்றத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறப்படுகின்றது.**

ஒரு கற்பாந்தரத்தில், உலகம் அழிந்தபின், திருமால் நான் முகனைத்தன் உந்திக் கமலத்திலே தோற்றுவித்து, உலகைப் படைக்கும் படி பணித்தார். உலகைப் படைத்த பிரம்மாவும், பிரம்மாவைத் தோற்றுவித்த விஷ்ணுவும், “தங்களுக்குள், வல்லமை பொருந்தியவர் எவர்?“ என அறிந்து கொள்ளும் பொருட்டு வாதாடி, ஈற்றில் போர் தொடுத்தனர். அப்பொழுது எல்லாம் வல்ல இறைவன், உண்மையை விளக்கும் பொருட்டு, இருவருக்கும் இடையே, ஒளிப் பிளம்பாய்த் தோன்றி, ”என் அடியையோ அல்லது முடியையோ, முதலில் காண்பவரே, உங்கள் இருவரில் வல்லமை கூடியவர்” என்று கூறினார். பிரம்மா அன்னப்பட்சி ரூபமெடுத்து, மடியையும், விஷ்ணு பன்றி ரூபமெடுத்து முடியையும் காணச் சென்று, இறுதியில், ஜோதியின், அடி, முடியைக் காணாது தோல்வியுடன் திரும்பி வந்து, சிவனருளால், தம் ஆணவத்தை உணர்ந்து, நற்புத்தி பெற்றது சிவராத்திரி தினத்திலென்பர்.

சிவராத்திரியின் மகிமையை விளக்கும் பொருட்டு புலிக்குப் பயந்து, வில்வ மரத்தின் மேல் ஏறி, சிவகதியடைந்த வேடனுடைய கதையும் பிரசித்தமடைந்துள்ளது.

**சிவராத்திரியின் புராண இதிகாச வரலாறு.**

சர்வசங்கார காலத்தில் யாவும் அழிக்கப்பட்டு இருள் கவிந்து நின்றபோது உமாதேவியார் சிவலிங்கத்தில் யாவும் ஒன்றித்திருந்த நிலையில் சிவனை பூஜை செய்த வழிபாடாற்றி, உலகங்களையும் உயிரினங்களையும் திரும்பவும் படைத்து உய்வித்தருளவேண்டும் என இரந்து வேண்டியமைக்கு இசைந்து தனது உடலில் ஒரு பாதியைக் கொடுத்து அர்த்த நாரீஸ்வரராகிய தினம் எனவும், அம்பாளின் வேண்டுதலின் படி சுவாமியே, சிவராத்திரியில் நான்கு சாமப்பூஜைகளிலும் பங்குபற்றி, விரதபங்கமில்லாமல் தம்மை வழிபடுவோருக்கு மோட்டப் பிராப்திகிடைக்க அருள் செய்தார் எனவும் கூறப்படுகின்றது. வசிவபிரானால் அருளப்பட்ட சிவராத்திரி விரதத்தை அனுசரித்து முக்திப்பேறு அடையவேண்டும்.

பிரம்மா விஷ்ணு ஆகிய இருவம் அகந்தையினால் தாமே “பிரமம்” எனத் தாக்கித்து ஒருவருடனொருவர் யுத்தம் செய்தபோது ஜோதிப் பிழம்பாகத் தோன்றி சிவன் தாமே பிரம்மம் என்பதை காட்டியதாகவும் புராணம் கூறுகின்றது. உமையம்மையின் சிவராத்திரி பூஜையால், அவரின் விருப்பப்படி, இவ்விரதத்தை முறைப்படி

அனுட்டிப்போர் பிறவித்தளையிலிருந்து விடுதலை பெற்று மோட்சத்தில் திளைப்பர் என சிவபெருமான் பார்வதிதேவிக்கு வரம் கொடுத்துள்ளார் என்பது புராண வரலாறு.

தொடர்ந்து பிறவி (தோற்றம்) நிலைத்திருத்தல் இறப்பு (அழிதல் ஆகிய சுழற்சியில் ஆன்மாக்களும் மற்றும் சராசரங்களும் மாறிமாறி உழல்வது இயற்கையின் நியதியாகும். சிவலிங்கம் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் குறியீடாகவும், எங்கும் வியாபித்திருக்கும் பதிக்கு ஞானிகளால் வணங்கப்படும் சதாசிவ மூர்த்தமாகவும் அமைந்துள்ளது.

சிவராத்திரியில் விழித்து இருத்தல் பற்றிய ஒரு கதை மகாபாரதத்தில் சாந்திபர்வத்தில் உள்ளது. பிஷ்மர் தனது இறுதிக்காலத்தில் அம்புப்படுக்கையில் கிடக்கின்றபோது தர்மத்தைப் பற்றிய உபதேசம் செய்கின்றார். அப்பொது சிவராத்திரியில் விழித்திருப்பதால் பெரும் புண்ணியம் ஏற்படும் என்று கூறுகிறார் இக்ஷபொரு சாம்ராஜ்யத்தை ஆண்ட சித்திரபானு என்ற அரசன் சிவராத்திரியை அனுட்டித்து, அதனால் தான் ஜம்பூத்வம் முழுவதையும் தனது ஆட்சிக்குக் கீழ் கொண்டுவந்து அரசபோகத்தில் திளைத்திருந்ததையும் அப்போது அட்ட வக்கிரர் என்ற முனிவர் அரசனின் அரண்மனைக்குவந்திருந்தபோது, அவருக்கு மனன்ன் தனது பூர்வஜன்ம வரலாறை அறிந்து கொள்ளக் கூடிய ஆற்றலை சிவராத்திரி விரதமிருந்த பலனால் கிடைத்ததெனவும் சொன்னான். அவன் தொடர்ந்து கூறுகையில், தான் முற்பிறவியில் ஒருவேடனாக பிறந்து வேட்டையாடித்திரிந்ததாகவும், ஒருநாள் வேட்டைக்குப்போய் வீடுதிரும்ப முடியாததால் இரவை ஒரு மரத்தின் அடர்ந்த கொப்புகளில் ஏறி ஒளித்திருந்து, துஷ்டமிருகங்களிடமிருந்து தப்பிக்கொள்வதற்கு மரத்தின் இலைகளை தனது அம்பினால் தட்டி ஒடித்துக்கொண்டு இருந்ததாகவும் விடிந்தபின்னரே மரத்திலிருந்து இறங்கி பார்த்தபோது மரத்தின் கீழே ஒரு சிவலிங்கம் இலைக்களுக்குக் கீழ் மறைந்திருந்ததென்றும் அச்சிவலிங்கத்துக்கு சிவராத்திரி காலத்தில் நான்கு சாமமும் கண்மூடாமல் விழித்திருந்து சிவராத்திரி என்று கூட அறியாமல் வில்வப்பத்திரத்தால் அர்ச்சித்தபடியினால் தனக்கு அரச பதவியும் அரசுபோகமும் சிவனருளால் கிடைக்கப்பட்டதெனவும் அட்ட வக்கிர முனிவருக்குக் கூறினான். தான் ஏதோ பூர்வபுண்ணியம் செய்திருந்தபடியால் காசிே!'த்திரத்தில் வேடனாகவாவது மானிடப்பிறவி எடுக்கக் கூடியதாக விருந்ததென்றும் தன் பூர்வஜன்ம வரலாற்றை, எடுத்துரைத்தான். தனது பெயர் சுஸ்வரவென்பதே முற்பிறப்பெயராக இருந்ததென்றம் கூறக்கேட்டறிந்த முனிவர் சிவராத்திரி விரதத்தின் மகிமையை தன் சீடர்களுக்கும் கூறினார்.

மேற்படி கதையில் பொதிந்துள்ள குறியீட்டுப் பொருளை ஆராய்வோம். வேடனின் தொழில் வேட்டையாடி மிருகங்களையும் பறவைகளையும் கொன்றொழித்தல் இங்கே பொறாமை, கோபம், பேராசை, அதிக உணர்ச்சி வசப்படுதல், மோகம், பெண்மோகம், முதலான மனமாசுகளே மிருகங்களாகக் குறியீட்டுப்பொருளாகக் குறிப்பிடப்பட்டது. அடர்ந்தகாடே மனத்தின் நான்கு தொழிற்பாடு - அடிமனம், புத்தி, ஆணவம் மனச்சாட்சியின் மருட்சி என்பன. மனமாகிய காட்டிலே இந்த துஷ்மிருகங்கள் சுகித்துத் திரிந்து ஆன்மாவுக்கு தீங்கு இழைக்கின்றன. எனவே அவைகளை அழித்து ஒழிக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. ஒருயோகியின் கடமையும் இதே தான் முதலில் மனமாசுகளைக்களைதல். வேடனின் பெயர் "சுஸ்வர" என்பது அவன் இனிய வார்த்தைகளை பேசுபவனாக இருந்தான். மனத்தில் தீய எண்ணம் இல்லாதபோது இனியவை கூறுதல் தானாக ஒருவருக்கு அமைந்து விடும்.

ஒருவர் இயம நியமங்களை முறைப்படி செய்து வருவரானால் தீய எண்ணங்களும் செயற்பாடுகளும் அறவே நீங்கும். தீயவையாகிய மனமாசுகள் அகலதேகம் பாரமாக இல்லாமலும் உறுதியான சுகாதாரமான அம்சங்களைப் பெறலாம். குறிப்பாக அழகிய ஒளிபடைத்த கண்கள் தெளிந்த அறிவு, மற்றும் இனியமொழி வாக்குப் பலிதம் என்பவையாம் இந்த நிலைபற்றி சுவேதாஸ்வர உபநிடதத்தில் விபரமாக கூறப்படுகின்றது. சுஸ்வர என்ற வேடன் இனியமையான பேச்சு பேசுபவனாக மாறிவிட்டான். அவன் தன்னை அறியாமலே யோகம் வழிபாட்டு முறையை அநேக வருடங்கள் கொண்டிருந்தபடியால் இனிமையான வாய்ச்சொல் உடையவனாகினான். இது யோகம்பயில்வோருக்கு தானாகவே வந்துசேரும். சுவேஸ்வரன் என்ற வேடன் வாரணாசியில் வாழ்ந்ததாக உபநிடதம் கூறுகிறது. யோகிகள் இரு புருவத்துக்கும் நடுவில் உள்ள இடத்தை ஆஞ்ஞாசக்கரம் அல்லது வாரணாசி என்பர். இந்த இடத்தில் இட, பிங்கள, சுருமுனை என்னும் மூன்று நாடிகளின் நரம்பு மையம் இருக்கின்றது. சாதகன் ஒருவன் யோகமார்க்கத்தை ஆர்வத்துடனும் முழுநம்பிக்கையுடனும் குருவால் உபதேசித்தபடி செய்து வந்தால் அதாவது சொல்லப்பட்ட மூன்று நாடி நரம்புமையத்தில் தனது அகப்பார்வையைச் செலுத்தி வருவானாயின் அவன்தான் விரும்புவதை அடையும் திறனுடன் மனமாசுகளாகிய பொறாமை, கோம், பேரவா, காமவுணர்ச்சி, சித்தப்பிரேமை, மோகாவேசம், வெறுப்புப் போன்ற தீய குணவியல்புகளையும் நீக்கிக் கொள்ள முடியும். இந்த அரிய நிலையிலேயே யோகிகள் தெய்வீகமான சுடர்ஒளியை தமது புருவமத்தியில் காணும் பேறு அடைகின்றனர்.

சுஸ்வர(ன்) என்ற அவ்வேடன் வில்வமரத்தில் ஏறியிருந்து கொண்டு வில்வப்பத்திரங்களை ஒடித்து போட்டுக் கொண்டு சிவராத்திரி தின இரவை கண்தூங்காமல் கழித்தான் என்பதன் குறியீட்டுப்பொருள், இடை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்றும் ஒரு காம்பில் (புருவமத்தியில்) சந்திக்கின்றதை வில்வமலை ஒருகாம்பில் மூன்று இலைகளும் இருப்பதை ஒத்தது. வில்வமரம் முதுகுத்தண்டைக்குறிக்கின்றது. வில்வமிலை புருவ மத்தியைக் குறிப்பது. இங்கே சந்திர, சூரிய, அக்கினி ஆகிய மூன்றும் செயற்படுகின்றது. மூன்றும் சிவபெருமானின் முக்கண்களைக் குறிக்கின்றன. எனவே வில்வமிலை சிவனுக்கு அர்ச்சனை செய்ய வி'ேசமாகக் குறிக்கப்படுகின்றது.

மூலாதாரத்திலிருந்து குண்டலினிசக்தி தோன்றிமுள்ளந்தண்டினூடாக சகஸ்ராத்தை அடைகின்றதாக போகமுறையில் கூறப்படுகின்றது. சுஸ்வரன் வில்வமரத்தில் ஏறிக்கொண்டமை, மூலாதமாரத்திலிருந்து குண்டலினிசக்தி மேலெழும்பி முள்ளந்தண்டால் வாரணாசி என்று குறிப்பிடப்படும். புருவ மத்தியை அடைதல். இது யோகிகள் மேற்கொள்ளும் அரும்பெரும் முயற்சி. யமம், இயமம் பிரத்தியாகாரம் என்னும் நிலைகளைக் கடந்து யோகத்தில் திளைத்திருத்தல் யோகிகளின் நிலை. தான்வேட்டைஆடும்போது வேண்டிய அம்பு, வில்,

அம்புறாத்துணி, தான் இரவு சாப்பிடக் கொண்டு வந்த தேனில் ஊறிய இறைச்சி இசையாவையும் மரக்கொம்பில் கட்டிவிட்டு பசிதாகம் முதலியவற்றை மறந்து வில்வமிலைகளை அர்ச்சித்து இருந்த நிலைதான் உணர்ச்சிகளை ஒடுக்கி கண்விழித்து, நித்திரையில்லாமல் இருந்த உபசாச நிலை - மனஉறுதியுடன் அவன் திடசங்கங்பத்துடன் வில்வம் இலைகளைப் போடும் மனஒருமைப்பாட்டு நிலை.



தன் மனைவி, மக்கள் அவர்களின் பசியை தான் தீர்க்க வேண்டுமாதலால் அவன் செய்யும் வேட்டைத் தொழில் இவைபற்றியெல்லாம் சிந்திக்காமல், வில்வமிலைகளை ஒடித்துப் போடும் ஒரு முனைநோக்கு - இவைகள் லௌகீக மனம் தன் நிலைப்பாட்டை மறந்துவிட்டு, பந்தம், பற்று, மோகம், காமம் முதலாகிய உணர்ச்சிகளிலிருந்து விடுபட்டு நின்ற மனோநிலையைக் காட்டுகின்றது.

சமாதி நிலையிலேயே யோகிகள் எல்லா உயிரினங்களிலும் தன் உயிர் - பிரம்மம் உறைவதை உணரும் நிலை உலக பந்தங்களிலிருந்து எழுந்து மனங்கடந்து, எங்கும் வியாபகம் ஆகிய தன் உயிரின் உயர்ந்த நிலை - இது சாமாதிஜ நிலை இந்த நிலை முன்னர் ஏற்படுவதில்லை. இட, பிங்கல, சுழுமுனை நாடியில் தொழிற்படும் மூச்சு யோக நிலையில் இரண்டாவதுநிலை.

சுஸ்வர(ன்) வில்வமரத்தில் இருந்து, நித்திரைக் கொள்ளாமல் (அர்ச்சனை செய்த) நிலை கனவு காணும் நிலை, தான் செய்வது என்ன என்பது தெரிய முடியாத நிலை - இரவு மூன்றாம் சாமம் விடிய முன்னுள்ள அதிகாலையில் அவன் "துரிய" நிலையில் இருந்தான் மரத்திலிருந்து இறங்கியபோது சிவலிங்கத்தை மரத்தின் அடியில் காணுதல் அவன் செய்த தவப்பயனின் யோகசித்தி - மனத்தின் தொழிற்பாடு முதிர்ந்த நிலை ஒளியை - சிவ ஜோதியை காண்டநிலை. சிவபெருமானைச் சார்ந்து மிகவிரைவில் இரண்டறச் சிவனுடன் கலந்து கொள்ளக்கூடிய மோ' நிலை - சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதங்களை அவன் பெறப்போகும் கிடைத்தற்கரிய பெரிய பரிபக்குவநிலை அவன் தன் வீட்டுககு போனபின் எல்லோருடனும் தன்னுணவைப் பகிர்ந்து உண்டு. தன்வீட்டுக்கு தேடிவந்த ஒருவனுக்கும் உணவு கொடுத்தல் தன்னை அவனைத்தேடிவந்த விருந்தாளியில் காணும்நிலை. காணுமிடமெல்லாம் இறைவனைக் காணுதலும், உயிரினங்கள் யாவற்றிலும் இறைவனைக் காணுதலும் சுஸ்வரன் ஆகியவேடன் பெற்ற பெருநிலையாகும். இவ்வாறு தன்னை அறியாமலே சிவராத்திரிவிரதம் அனுட்டித்ததன் பலனாகி தனது அடுத்த பிறவியில் "சித்திரபானு" என்ற பெயருடைய அரசனாக பிறந்து புண்ணிய பேற்றைப் பெற்று இனிதே வாழ்ந்தவனே அவ்வேடன் என பீஷ்மர் தன் இறுதி உபதேசத்தில் கூறினார்.

## நவராத்திரி

பிரபஞ்சத்தின் தாயாக இறைவனின் சக்தியாக அன்னையை நவராத்திரி காலத்தில் போற்றித் துதிக்கின்றோம். இறைவியின் ஆக்கல் காத்தல், அழித்தல் வல்லமையை மூன்று பகுதிகளாகம், ஒவ்வொரு பகுதியும் மும்மூன்று இரவுகளை உடையதாகவும் எல்லாமாக ஒன்பது இரவுகளை அன்னைக்கு அர்பணித்து விரதம் அனுஷ்டிக்கின்றோம். இக்கொண்டாட்டம் இந்துக்களால் இமயம் முதல் குமரியையும் கடந்து பல தேசங்களில் துர்க்கா பூஜை எனக் கொண்டாடப்படுகின்றது. வாழ்வில் பல இன்னல்கள் தோன்றுவதால் அவற்றை நீக்கும் பொருட்டு துர்க்கையை வேண்டி இவ்விழாவை அஷ்டிக்கிறோம். சக்தி, தேவி, வாணி, ல்'மி என்னும் நாமங்களாலும் அன்னையை நாம் அழைப்பதால் இவ்வழிபாடு தேவி ஆலயங்களில் நவராத்திரியின்போது அனுஷ்டிக்கப்படுகின்றது. முதல் 3 நாளும் துர்க்கையை வேண்டுதல் செய்து மனமாசுகளை நீக்கி ஆத்மஞானத்தைத் தந்து எமது குறபாடுகளின்படியும் அடுத்த மூன்று நாட்கள் ல்'மியைக்குறித்து செல்வத்தை அருளும்படியும், கடைசி 3 நாட்களும் சரஸ்வதி தேவியிடம் கல்வி, (பதி-ஞானம், பசுஞானம்) புத்திக்கூர்மை, பகுத்தறிவு என்பவற்றை அருளும்படியும் வேண்டுவர். ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகிய செல்வத்தைப் பெற்று தத்தமது வாழ்க்கை வளமுடன் அமையுமாறும் ஒன்பது நாளும் வழிபாடு சக்தியின் மூன்று அம்சங்களாகிய மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய அம்சங்களைக்குறித்து விமரிசையாக நடந்தேறும். பின்னர் பத்தாவது தினமாகிய தசமித்திதியன்று, பூஜை, புனஸ்காரம், ஹோமம், மஹிஸாசூரசம்ஹாரம் என்பன நடைபெறும். "விஜயதசமி" எனவும், கல்வி கற்றல் (ஏடு தொடக்கம்) எனச் சொல்லப்படும் புதிய வித்தைகளைக் கற்கத் தொடங்கல் என்பன விஜயதசமியில் மேற்கொள்ளப்படுகின்றது. "ஆயுதபூசை" என்று சொல்லப்படும் வழிபாடு நவராத்திரியில் ஒன்பதாம் நாள் கொண்டாடப்படுகின்றது. தொழில்செய்வோர், வாத்தியங்களை இசைப்போர், யந்திரநுட்பங்களை அறிந்து தொழில்செய்வோர் தொழிற்பட்டறைகளில் இரும்பு, பொன்,வெள்ளி முதலிய நுட்பமான தொழில்.




நவராத்திரி விழா என்பது சக்தி பூஜையையே குறிக்கும். இவ்விழா ஒன்பது இரவுகள் கொண்டாடப்படுவதால் நவராத்திரி என்ற பெயர் ஏற்பட்டது. பல இடங்களில், பல பெயர்களால் நடாத்தப்பட்டு வரும் இவ்விழா, புரட்டாசித் திங்கள், பூர்வபட்சத்துப் பிரதமையன்று ஆரம்பமாகி , ஒன்பது தினங்கள் நடைபெறும். நவராத்திரி விரதத்தின்போது சக்தி ஒன்பது சொரூபியாய்ப் பூஜிக்கப்படுகிறாள். நவராத்திரி விரத நாட்களில் முதல் மூன்று

தினங்களும் வீரத்துக்காக துர்க்கையையும், அடுத்த மூன்று தினங்களும் செல்வத்திற்காகத் திருமகளையும், இறுதி மூன்று நாட்களும், கல்விக்காகக் கலை மகளையும் வழிபடுவது வழக்கம்.


நவராத்திரி விரதம், தேவியின் மூன்று முக்கிய குணங்களெனப்படும், சாத்வீகம் , இராசதம், தாமதம் பொருந்திய ஞானாசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி என்னும் தோற்றங்களைக் குறிக்கும். இத்தோற்றங்களே துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி எனப்போற்றப்படுகின்றன.


சக்தி வழிபாடு உலகத்தின் மிகப் பழைமையான காலந்தொட்டு பற்பல பாவனைகளாக பற்பல பகுதிகளில் நடைபெற்று வந்திருப்பது, சரித்திரம் கூறும் உண்மை. உலகின் ஆதிவாசிகள் இயற்கையை பல்வேறு நிலைகளில் வழிபட்டு வந்தார்கள்.

சக்தி வழிபாடு மிகவும் தொன்மையானதொன்று என்பதனை சரித்திர ஆராய்ச்சியாளர்களும், புதைப்பொருள் ஆராய்ச்சியாளர்களும், மொகஞ்சதாரோ போன்ற தொன்மையான புதைபொருட்களை நல்கிய தொல்பொருட்களிலிருந்து ஆதாரம் காட்டிக் கூறியுள்ளார்கள். சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம், சாக்தம் என அழைக்கப்பட்டு வருகின்றது. தந்திரங்கள் எனக் கூறப்படும் நூல்கள் சக்தி வழிபாட்டு முறைகளையும் அவற்றால் உண்டாகும் நன்மைகளையும் கூறுவன. நிர்வாண தந்திரம், திரிபுரா ரகசியம், காமகலா விலாசம், குலசூடாமணி, தந்திரராஜம், பிரபஞ்சசாரம், குலார்ணவதம், சாரதாதிலகம் போன்ற பழைய நூல்கள் சக்தி வழிபாட்டின் மகிமையையும் அதனாலுண்டாகும் பெறுபேறுகளையும் கூறும் தந்திர நூல்கள்.

நவராத்திரியில் பல வகை

நவராத்திரி விழா ஒவ்வொரு “ருது“ விலும் கொண்டாடப்படும் விழா. இவற்றில் வசந்த நவராத்திரியும், சாரதா நவராத்திரியும் மிக விசேடமாகக் கொண்டாடப்பட்டு வருபவை. நவராத்திரி விழா பூர்த்தியான மறுநாள், விஜயதசமி விழா நடாத்தப் பெறும். புதிதாகத் தொடங்கப்படும் காரியங்களை ஆரம்பிப்பதற்கு, இந்நாள் மிகவும் முக்கியமான தொன்றாகக் கருதப்பட்டு வருகின்றது.

தேவி பாகவதம், நவராத்திரி விழாவை“ நவராத்ரா“ எனக் குறிப்பிடுகின்றது.

நவராத்திரி விழா இந்து சமூகத்தவர்களிடையில் நல்லெண்ணத்தையும் நட்பையும், கலையார்வத்தையும் அணைய விடாமல் காத்து வளர்க்கும் பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. பல இடங்களில் பலவாறாகக் கொண்டாடப்பட்டு வரும் நவராத்திரி விழா, தமிழ் நாட்டில் சமய அனுஷ்டானங்கள் அதிகமின்றி, சமுதாய அம்சங்களை ஆங்காங்கே கொண்டதாக விளங்குகின்றது.

நவராத்திரி விழாவின் ஆரம்பத்திலேயே, இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களுடைய குடும்ப மனைகளிலெல்லாம் "கொலு" வைப்பது ஒரு பாரம்பரியம். வீடுகளில் மரத்தினால் படிகளை அடுக்கடுக்காக கட்டி, அவற்றில் அழகான பொம்மைகளையும், விக்கிரகங்களையும் அழகுற வைத்து அலங்காரஞ் செய்து, இல்லத்தையே ஒரு கலைக்கூடமாக, ஆக்கி விடுவார்கள். இது சைவ சமயத்தவர்களின் கலைத் திறமையையம், கலையை இரசிக்கும் தன்மையையும் காட்டுகின்றது. "கொலு" வைத்துத் தங்கள் நண்பர்களையெல்லாம் அழைத்து உபசரித்து, பலகாலமாகச் சந்திக்காமலிருந்தோர்களையெல்லாம் கண்டு அளவளாவி, நட்பையும், கலைத்திறனையும், புது உறவையும் பரிமாற ஏற்படுத்துவது இந்நவராத்திரி விழவே.

**புராணக் கதை**

நவராத்திரி விழா தோன்றியதை விளக்கப் பல புராணக் கதைகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவற்றில் சில, கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பார்வதிதேவி, ஒன்பது தினங்கள், பரமசிவனை நோக்கி கடுந்தவம் புரிந்து, எல்லோருக்கும் துன்பம் விளைவிக்கும், மகிஷாசுரனைக் கொல்வதற்கு அருள் பெற்றார். கொடுமை புரிந்து வந்த மகிஷாசுரனை பத்தாவது நாள் சங்காரம் செய்தார். மகிஷாசுரனைக் கொன்றபடியால் “மகிஷாசுரமர்த்தனி“ என்னும் பெயரை பெற்றார். இதனால் தான், நவராத்திரி விழா ஒன்பது நாட்கள் கொண்டாடப்பட்டு பத்தாவது தினம் விஜயதசமி என்ற பெயரால் கொண்டாடப்பட்டு, வருகின்றது.

இதன் உட்பொருள் என்னவென்றால், மகிஷாசுரன், அவன் பரிவாரங்கள் முதலானவை அஞ்ஞானமாகவம், அதன் காரியங்களாகவும், தேவியை சித்சக்தியாகவும், அது பரம்பொருளாகிய ஆத்ம சாஜீத்கார விசேடத்தால் அஞ்ஞானத்தை அடியோடு அகற்றுவது மேயாம்.

ஸ்ரீ ராம பிரான், இலங்கை வேந்தனாகிய இராவணனை, விஜய தசமியிலன்று. கொன்று தர்மத்தை நிலைநாட்டியதாகவும், அதனால் இவ்விழா கொண்டாடப் படுகின்றதென்பர் சிலர்.

இலட்சுமிதேவி, ஆண்டாள் என்னுந் திருநாமத்தோடு அவதரித்து, திருப்பதி வெங்கடேசப் பெருமானை, மணம் முடிக்க ஒன்பது தினங்கள் தவமிருந்து, விஜயதசமியில், தம்மெண்ணப்படி திருமணம் புரிந்ததாயும், எனவேதான் நவராத்திரி விழா கொண்டாடப்படுகின்றது. என்பர் இன்னும் சிலர்.

**தசராப் பண்டிகை**

நவராத்திரிஎன்னும் ஒன்பது தினங்களுடன், விஜய தசமியையம் சேர்த்து சிலர், தசராப் பண்டிகை என்ற பெயருடன் கொண்டாடுவார்கள். வட இந்தியாவில் இந்தப் பண்டிகை, வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றது. தசம் என்றால் பத்து எனப் பொருள் படும். ஆகவே தசரா பண்டிகை என்பது பத்துத் தினங்கள் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும்.

**திருக்கார்த்திகை**


கார்த்திகை மாதத்துப் பௌர்ணமித் தினத்தன்று விநாயகர், சிவன், சக்தி ஆகிய கோயில்களிலும், திருமால், முருகன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களில், கார்த்திகை மாதத்தின், குறிப்பிட்ட நட்சத்திரங்களில் நடைபெறுவது, இவ்வுற்சவம் சந்திரோதயத்தின் பொழுது கிருத்திகை உற்சவம் நடைபெறுவது வழக்கம்.

தென்னை, சண்பகம் போன்ற மரங்களால், கோயிலின் பிராசாதத்தின் உயரமாகவோ அன்றி, கபோதத்தின் உயரமாகவோ, தீப தண்டம் அமைத்து, பனை ஓலைகளால், தீபகிலங்கள் அமைக்கப்படல் வேண்டுமெனக் கிரியை நூல்கள், கூறுகின்றன. இதனைச் சொர்க்கப்பனை என அழைப்பர்.

சுவாமிக்கு முன் ஓமகுண்டம் நிறுவி, யாகத் தீயினை வளர்த்து, அத்தீயினால் ஒன்பது தீபங்கள் ஏற்றி, பின் அவற்றை, ஒரு தீபமாக்கி, சுவாமியை எழுந்தருளச் செய்து, சொக்கப் பனைக்குத் தீ மூட்டுவர்.

திருக் கார்த்திகை தமிழ் நாட்டில், பெருந் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. தமிழ் இலக்கிய நூல்களிலும், இப்பெருந் திருவிழாவைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. உதாரணமாக அகநானூறு, களவழி நாற்பது, கார்நாற்பது, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



**புராணக் கதைகள்**

திருக் கார்த்திகையையொட்டியப் பல புராணக் கதைகள் உள்ளன. அவற்றில் சில மிகவும் பிரசித்தி பெற்றவை.

கார்த்திகைப் பௌர்ணமித் தினத்தில், சிவன் ஜோதிர் மயலிங்கமாகத் தோன்றி, திருமாலுக்கும், நான் முகனுக்கும் நற்புத்தியைப் புகட்டினான்.

விஷ்ணு, திரிவிக்கிரமனாகத் தோன்றி, மகாபலிக்கு நற்கதியளித்தார்.

சிவன் முப்புரங்களை எரித்தார் போன்றவை சில சிவபிரான் முப்புரங்களை எரித்த புராணக் கதை பின்வருமாறு கூறப்படுகின்றது.

தாரகாசுரனுடைய புத்திரர்களான வித்தியுன் மாலி, தாரகாட்சுரன், கமலாட்சன் (மகராட்சன்) என்ற மூன்று அசுரர்கள் சிவனிடம் வரங்கள் பல பெற்று, மூன்ற பட்டணங்களில் இருந்து உலகோரை இம்சித்தனர். தாம் மூவரும் அபூர்வமாகக் கூடியிருக்கும் பொழுது, பிறப்பு, இறப்பு இல்லாத, ஒரு திவ்விய புருஷர் இதுவரை உருவாக்கப்படாத அதியற்புத தேர், குதிரை, சாரதி, வில், அம்பு கொண்டு போர் செய்தால்தான், தங்களுக்கு மரணம் ஏற்பட வேண்டும் என, இறைவனிடம் வரம் பெற்றிருந்தனர். இதற்கேற்ப இறைவன் கைலாசத்தையே தேராகவும், பூமியையே தேர்த் தட்டாகவும் மந்தரமலையையே தேர் அச்சாகவும், சூரிய, சந்திரரையே சக்கரங்களாகவும், அட்ட குலாசங்களையே தேர்த் தூண்களாகவும், கடல்களையே தேர்ச் சீலையாகவும், நதிகளையே கொடிகளாகவும், உபவேதம் முதலிய கலைகளையே தேரின் மணிகளாகவும், வேதங்களையே குதிரைகளாகவும், நான்முகனையே தேர்ச் சாரதியாகவும், ஓங்காரத்தையே சாட்டையாகவும், மேருமலையையே வில்லாகவும், "வாசுகி" என்னும் பாம்பினையே நாணாகவும் அமைத்து, கலைமகளையே வில்லின் மணியாகவும், திருமாலையே அம்பாகவும், அக்கினியையே அம்பின் நுனியாகவும், வாயுவையே அம்பின் சிறகாகவும் பாவித்து, ஒரு புன்சிரிப்பை உதிர்த்தே அசுரரை வதைத்து முப்புரங்களை எரித்தார்.

இச் சம்பவத்தினை சிலப்பதிகாரம், புறநானூறு, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, கலிங்கத்துப்பரணி போன்ற தமிழ் இலக்கிய நூல்களிலேயே காணலாம்.

முப்புரம் என்பது மூன்ற கோட்டைகள் என்ற புராணக் கதை கூறுகின்றது. ஆனால் முப்புரம் என்பது மும்மலம் என்ற தத்துவார்த்தத்தைக் கொண்டது என்பதைத் திருமூலர் கூறகின்றார்.

“அப்பணி செஞ்சனை ஆதி புராதனன் ”

முப்புரம் செற்றனன் என்பார்கள் மூடர்கள்

முப்புர மாவன மும்மல காரியம்

அப்புரம் எய்தமை யார் அறிவாரே”. -(திருமந்திரம்)

முப்புரம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் எனவும், சிவபெருமான் ஆன்மாக்களிடம் கூடியுள்ள மும்மலங்களையே அழித்தார். என்ற தத்துவார்த்தத்தை உணர வேண்டும்.

**மார்கழிமாதப் பூஜை**

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை இரவாகவும், தைமாதம் முதல் ஆனி மாதம் வரை பகலாகவும் தேவர்களுக்கு ஒரு நாளாகும். என சமய நூல்கள் கூறுகின்றன. மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறைப் பொழுதாக விளங்குகின்றது. எனக் கூறுவர். மார்கழி மாதத்து, உதய காலத்தில் பூஜைகள் நடாத்த வேண்டும் என காரணாகமம் கூறுவதற்கிணங்க, கோயில்களில் விசேட பூஜைகள் சூரியோதயத்துக்கு முன் நிகழ்வது வழக்கம்.

“வைகறையில் இருள் நீங்க ஒளி எழுவது போல், ஆன்மாக்களுடைய திரோதான மலம் அகல ஞான ஒளி வெளிப்படுகின்ற முறை மையை“ திருப்பள்ளி யெழுச்சிப் பூஜை இலகுவில் விளக்கவல்லது.

**திருவெம்பாவை, ஆருத்ரா பூஜை**

மார்கழித் திங்கள், திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறும், ஆருத்ரதா தரிசனப் பூஜையின் முன்னுள்ள ஒன்பது தினங்களும், காலையில் தனுர் மாதப் பூஜையின் பின், நடராஜப் பெருமான் சன்னதியில், பரமன் ஏடெழுதக் கோவை உணர்த்திய, மாணிக்கவாசகப் பெருமான் பாடியருளிய திருவெம்பாவை என்னும் பாடல்கள், பாடப்படுவது வழக்கம், வைஷ்ணவக் கோயில்களில் சூடிக் கொடுத்த சுடர் கொடியாகிய, ஆண்டாள் பாடியருளிய, திருப்பாவை என்னும் பாசுரங்கள் பாடப்படுவது மரபு.

திருப்பாவை, திருவெம்பாவை போன்ற நூல்கள் கூறும் இப்பாவை நோன்பு, தமிழ் நாட்டில் தை நீராடல் என்ற பெயராலும் கொண்டாடப்பட்டு வந்தது. நற்றிணை, ஐங்குறுநூறு , கலித்தொகை, பரிபாடல், போன்ற தமிழ் இலக்கிய நூல்களில், தை நீராடலைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.

## தீபாவளிப் பண்டிகை

நவராத்திரிக்குப் பின்னர் ஐப்பசிமாதத்தில் விளக்கு ஒளி ஏற்றி வழிபடும். பண்டிகையாக தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. இந்துக்களுடன், சீக்கியர், ஜைனர் (சமணங்கள்) முதலியோரும் இப்பண்டிகையைத் கொண்டாடுவர். நரகாசுரனை சத்தியபாமாஅழித்த தினமான நரக சதுர்தசித்தியில், அவன் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்விழா கொண்டாடப்படுகின்றது. புதுமணத் தம்பதியர்களின் “தலைத் தீபாவளி” இந்திய மக்களால் பன்னெடுங்காலம் கொண்டாடப்பட்டு வருகின்றது. கிருஷ்ண மந்திர்களுக்கு இந்துக்களும் குறிப்பாக வைஷ்ணவ மதத்தினரும் சென்று வழிபடுவர்.

தமிழர் வாழ்வில் விழாக்களுக்குக் குறைவே கிடையாது. அன்று நாகரிக வாழ்க்கை நடாத்திய தமிழினம், விருந்தோம்பல், கோபதாப உணர்ச்சிகளை மறந்து குதூகலமாக இருத்தல், இறைவனை வழிபடல் போன்றவற்றை, அவ்வப்போது கடைப்பிடிக்க, பல்வேறு வகையான விழாக்களை தம் வாழ்வில் பின்னிப் பிணைத்துக் கொண்டார்கள். அவ்வாறான விழாக்களில் தீபாவளிப் பண்டிகை மிகவும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது.

தீபாவளி யென்றால், விளக்குகளை வரிசையாக வைத்தல் என்று பொருள், ஆனால் தீபாவளியின் போது, விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்து, உலகை ஒளிமயமாக்குவது, வழக்கத்தில் இல்லை. திருக்கார்த்திகைத் திருவிழாவின் போது, தீபங்களை ஏற்றி வரிசை, வரிசையாக வைத்து, வழிபடும் வழக்கம் இருப்பதைக் காணலாம்.

தீபாவளிப் பண்டிகை தோன்றிய வரலாற்றை, விளக்குவதங்குப் புராணக் கதைகள் பல உள்ளன. அவற்றில் சில மிகப் பிரபல்யமானவை. அவற்றுள் ஒன்று பின்வருமாறு கூறப்படுகின்றது.

நரகாசுரன் என்னும் அசுரன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்று வானவர்களையும், மற்றவர்களையும் துன்புறுத்தி வந்தான். தேவர்களின் வேண்டு கோளுக்கிணங்க, கிருஷ்ண பரமாத்மா, சத்தியபாமை சகிதம், அவனை வதம் செய்த பொழுது அசுரன், ”நான் இறக்கும் இந்நாளை உலகில் உள்ளோர் தீப ஒளி ஏற்றி, சந்தோஷகரமான காரியங்களை நடாத்தி, இனிது கொண்டாடி, உலகை ஒளிமயமாக்க வேண்டும்.” என, சாகுந்தருவாயில் வேண்டிக் கொண்டான். அதனையொட்டியே தீபாவளி கொண்டாடப்பட்டு வருகின்ற தென்பர்.

மேற்கூறிய புராணக் கதையில் இருந்து, அறிவுக்கும் (கிருஷ்ண பரமாத்மா, தேவர்கள் முதலியோருக்கும்) அறியாமைக்கும் (அசுரருக்கும்) இடையில் ஏற்பட்ட பூசல்களையும், ஈற்றில் அறவே, அறியாமையை (தீச் செயல்களை) வென்ற தென்பதையும் நாம் அறிந்து, கொள்ளலாம்.

**அறியாமையின் அழிவு**

உலகமக்கள், கோபதாப உணர்ச்சிகள் இன்றி எவ்வித கவலைகளுமில்லாமல், ஒரு நாளையாவது கொண்டாட வேண்டுமென்றால், உலகில் பசி, பட்டினி, பஞ்சம், நோய், நொடி போன்றவையும் பல்வேறு பூசல்களும் இன்றி, நாடு செழிப்புற்றிருந்தால் தான் இது சாத்தியமாகும். இதற்கு முதற்படியாக, அறியாமையை அறவே ஒழித்து, அறிவை வளர்க்க வேண்டும். இது நிகழும் பொழுது, அறியாமையால், பழமையை அழுங்குப் பிடியாகக் கொள்வோர்க்கும், அறிவை வளர்ப்போக்கும் இடையில், மோதல்கள் ஏற்படுவது இயற்கை. இதை மேற்கூறிய புராணக் கதையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

கடைசி வேண்டுகோள்

அசுரன் இறக்குந் தருணத்தில், தன் அழிவுக்காக, விழாக் கொண்டாட வேண்டுமென, இறைவனை வேண்டிக் கொண்டான். விழா கொண்டாட வேண்டு மென்றால், நாடு செழிப்புற்றிருக்க வேண்டுமென்று பொருள், நாடு செழிப்புற்று இருந்தால் தானே விழாக்கொண்டாடலாம்? இதில் இருந்து பண்டைய மக்களின் பண்பு தெளிவாக விளங்குகின்றது. அசுரன் (தீயவன்) தன்னைக் குற்றவாளியாகக் கண்டறிந்து, இறக்கும் பொழுது கூட, தனக்குப் பின் வாழ்பவர்கள், நல்வாழ்வு வாழ வேண்டும் என எண்ணுகிறான். அதுமட்டுமல்ல, ஒரு கொடியவன் இறந்த போனானே என்றாவது, உலகோர் சந்தோஷப் படவேண்டும் என எண்ணி தான் இறந்த நாளை, மங்கள கரமான காரியங்களை நடாத்தி, ஒளியேற்றிக் கொண்டாட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டானே யொழிய, உலக மக்கள் அனைவரும் தான் இறந்த தினத்தை, ஒரு துக்க தினமாகக் கருதி, அந்நாளைத் துக்கம் அனுட்டிக்க வேண்டுமென வேண்டிக் கொள்ளவேயில்லை.

புராணக் கதைகள், உண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் அல்ல. அற்றில் பெரும் பகுதி, வெறுங் கற்பனையில் உதித்தவையே. ஆனால் அது பண்டைய மக்களின் பண்பாட்டை விளக்குகின்றது. புராணக் கதைகள் யாவும், எமக்கு எளிதில் விளங்காத, தத்துவக் கருத்துக்களை இலகுவில் விளங்க வைப்பதற்காக எழுந்தவையே.

சிலர் இத்தீபாவளி விழா, சமண சமயத்தைச் சேர்ந்ததாகவும், பின் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களும் கொண்டாடும் பண்டிகையாகவும் மாறிய தென்பர்

**தைப்பொங்கல்.**

தமிழ் நாட்டிலே, தை மாதத்தின் முதலாம் நாள் தைப் பொங்கல் என்ற பெயரால், தமிழர் எல்லோராலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. விழாக்களில் சாதிமத பேதமின்றி எல்லோராலும் குதூகலமாகக் கொண்டாடப்படுவது இத்தைப் பொங்கல் விழா. இவ்விழாவை ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினுரோ அல்லது ஒரு குழுவினரோ தான், கொண்டாட வேண்டும் என்ற நியதிகள் இன்றி தமிழர் அனைவரும் கொண்டாடும் விழாவாக மிளிர்கின்றது. தமிழ் மக்களில் பெரும்பாலானோர் சைவ சமயத்தவராக விருந்ததால், காலப் போக்கில், இத் தைப்பொங்கல் விழாவிற்கும், இந்து சமயத்திற்கும் தொடர்புகள் ஏற்படலாயிற்று, இதன் பலனாக இந்துக் கோயில்களிளெல்லாம் இத் தைப் பொங்கல் விழா, ஒரு நன்னாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

**உழவர் திருநாள்**

தைப்பொங்கல் திருநாள், நாட்டின் உண்மையான உழைப்பாளிகள் எனப் போற்றப்படும் உழவர்கள் திருநாள். விவசாயிகள் படாத பாடுபட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் விழ நெல்லை விளைவிக்கின்றனர். நெல் விளைவின் காரணகர்த்தாவாக விளங்கும், சூரியனை வணங்கி, சூரிய பகவானுக்குத் தங்கள் வயலில் விளைந்த புது நெல்லைப் பதப்படுத்தி, பால் ஊற்றிப் பொங்கல் பொங்கினார்கள்.

விவசாயிகள், தங்களுக்கு நெல் உற்பத்தி கூடிவிட்டால், பொங்கல் விழாவை மிகவும் விமரிசையான முறையில் கொண்டாடுவார்கள். விளைச்சல் இல்லாது போனாலும், இவ்விழாவைக் கொண்டாடாமல் விடமாட்டார்கள்.

தமிழ் நாட்டு விவசாயிகள் ஏற்படுத்திய இவ்விழா, காலப்போக்கில், விரிவடைந்து, தமிழர் எல்லோரும் கொண்டாடும் ஒரு விழாவாக மாறியுள்ளது.

